| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.09.2025 | |
| CC.No. 136/2023 | |
| சாட்சி : PW1 (Recall) | |
| பெயர் : திரு. ரமேஷ் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. சேவிஅம்பலம் | தொழில் : கூலி |
| கிராமம் : முத்தப்படையான்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 47/2025 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. எனது குடும்பம் விவசாய குடும்பமா என்றால் விவசாயமும் செய்வோம், கூலி வேலை செய்வோம். எனது அப்பா சேவிஅம்பலத்துக்கு ஊரில் எவ்வளவு இடம் இருந்தது என்றால் சுமார் 12 –13 ஏக்கர் இடம் இருக்கும். எவ்வளவு இடத்திற்காக மனு கொடுக்கப்பட்டு வழக்கு நடந்து வருகிறது என்றால் சுமார் 3.1/2 ஏக்கர் இடத்திற்காக வழக்கு நடந்து வருகிறது. மேற்கண்ட 3.1/2 ஏக்கர் நிலம் தவிர்த்து மீதியுள்ள நிலத்திற்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றால் சரிதான்.

2. இந்த 3.1/2 ஏக்கர் நிலம் எனது தகப்பனார் சேவியம் அம்பலம் என்பவருக்கு சொந்தமானது என்பதை ஊர்ஜீதம் செய்வதற்கான 1986. 1956 க்கான UDR பதிவேட்டையோ, 1926 க்கான Settlement பதிவேட்டையோ புகார் கொடுத்த போது அல்லது போலீசார் விசாரித்த போதோ நான் ஒப்படைத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் புகாரில் எனது அப்பா சேவிஅம்பலத்துக்கு சொந்தமான சொத்து என்பதற்கு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த வழக்கிலோ, எனது அப்பா பெயரில் உள்ள சங்கதிகளை காண்பித்துள்ளேனா என்றால் இல்லை. எனது அப்பாவின்

சொந்தமான வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால் சரிதான். அந்த வீட்டில் குடியிருப்பதற்கு எனது அப்பா எனக்கு ஏதாவது ஆவணம் எழுதிகொடுத்துள்ளாரா என்றால் இல்லை. என்னுடன் உடன் பிறந்த எத்தனை நபர்கள் என்றால் சரசு, ஈஸ்வரி, நான் மற்றும் எனது சகோதரரான வழக்கின் எதிரி. எனது தரப்பு வழக்கு சொத்து 3.1/2 ஏக்கர் எனக்கும், எனது சகோதரிக்கஞுக்கும், எனது சகோதரருக்கும் சொந்தமான வழக்கு என்றால் சரிதான். எனது சகோதரிகள் சரசு, ஈஸ்வரி மேற்படி சொத்தில் பாகம் உள்ளது என்று போலீசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

3. போலீசார் என்னை விசாரிக்கும் போது எனது சகோதரிகளான சரசு, ஈஸ்வரியை இந்த வழக்கு சம்மந்தமாக விசாரித்து வாக்குமூலம் ஏதும் பதிவு செய்தாரா என்றால் இல்லை. 12 ஏக்கர் எங்களது குடும்ப நிலத்தில் சுமார் 4 ஏக்கர் நிலத்தை எனது சகோதரிகள் வேறு நபருக்கு கிரையம் எழுதி கொடுத்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். எவ்வித பாகம் பிரிக்கப்படாத நிலையில் சகோதரிகள் எழுதிகொடுத்த கிரையத்தை எதிர்த்து நான் எவ்வித வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் கொடுத்த புகாரில் திருப்பதி வெங்கடாசலம் என்பவர் இந்த வழக்கில் குற்றசதியில் ஈடுபட்டார் மற்றும் குற்றத்தில் ஈடுபட்டார் என்றும் எவ்வித சங்கதிகள் புகாரிலும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

4. எனது சகோதருக்கு கொடுக்கப்பட்டதாக சொல்லும் பட்டா எண் என்னவென்றால் 2910 ஆகும். 2910 பட்டாவானது முறையாக வட்டாச்சியரிடமிருந்து பெறப்பட்டது தான், போலியாக இல்லை என்றால் பட்டவானது வட்டாச்சியரால் வழங்கப்பட்டது. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் எண்.627/2021, 01.02.2021 அன்று 1ம் எதிரி 2வது எதிரிக்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மண்ட் பத்திரம் என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் தான் வழக்கு சொத்தான 3.1/2 ஏக்கர் நிலத்தை 1ம் எதிரி 2வது எதிரிக்கு எழுதிகொடுத்த தானசெட்டில்மண்ட் பத்திரம் என்றால் சரிதான்.

5. தானசெட்டில் மெண்ட் ஆவண எண். 2490/2005 ன் படி 1ம் எதிரிக்கு கிடைக்கபெற்று அதை 2ம் எதிரிக்கு தானமாக கொடுப்பதாக என்னிடம் காட்டப்படும் தானசெட்டில்மண்ட் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. தானசெட்டில்மண்ட் ஆவணத்தில் எனது பெயரில் 2910 என்ற பட்டா ஏற்பட்டு அனுபவித்து வருகின்ற நிலத்தை பொறுத்து அனுபவித்து வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 ஏக்கர் நிலத்தில் தான் 1, 2 ம் எதிரிகள் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான்.

6. புகார் கொடுக்கும் போது எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவை ரத்து செய்து 1ம் எதிரி அவரது பெயரில் பெயர் மாற்றம் செய்ததற்கான வட்டாச்சியரின் உத்தரவினை கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். எந்த வட்டாச்சியர் கொடுத்த உத்தரவு மற்றும் எப்போது கொடுக்கப்பட்ட உத்தரவு என்றால் எனக்கு அந்த விபரங்கள் தெரியாது. புகாரில் பட்டா ரத்து உத்தரவு, பட்டா பெயர் மாற்றம் உத்தரவு குறித்த விபரம் சொல்லியுள்ளோ என்றாலும், ஆவணப்பட்டியில் அந்த ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, புகார் மட்டும் தான் கொடுத்தேன்.

7. 1ம் எதிரி எந்த வருடம் பட்டா பெயர் மாற்றம் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரி எத்தனை வருடம் கழித்து பட்டா பெயர் மாற்றம் செய்தது தெரியவந்தது என்றால் கடந்த 2020 ம் வருடம் தான் எனக்கு அது குறித்து விபரம் எனக்கு தெரியவந்தது. 2020 ல் எனக்கு இந்த விபரம் தெரிந்தும் நான் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுப்பதற்கு முன்பு அந்த பட்டா செல்லாது என்று வருவாய் துறையில் நான் புகார் ஏதும் கொடுத்தேனா என்றால் இல்லை. மேற்படி பட்டாவானது எனது சகோதரால் முறையாக பெறப்பட்டது என்றும் அதனால் நான் வருவாய் துறையில் எவ்வித புகாரும் இது நாள் வரையில் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

8. இன்று வரை அந்த இடத்திற்கான பட்டா எனது சகோதரர் 1ம் எதிரி நாகராஜ் பெயரில்தான் உள்ளது, இன்று வரை இரத்து செய்யபடவில்லை. அந்த பத்திரம் மற்றும் பட்டா செல்லாது என்று நீதிமன்றத்தில் விளம்பகை பரிகாரம் கூறி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தகவல் உரிமை சட்டத்தின் கீழ் நான் வட்டாச்சியரிடம் எப்போது தகவல் கேட்டு பெற்றேன் என்றால் 2020 ம் ஆண்டிற்கு முன்பாக பெற்றேன். என்னிடம் காட்டப்படும் EX.P6 ல் முதலில் உள்ள அனுப்புநர், பெறுநர் உள்ள வாசகங்களுக்கும் வேண்டுகோள் கடிதத்தில் முதலில் உள்ள எழுத்திற்கும், கீழே எழுத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரிதான். EX.P6 ல் பக்கத்தில் உள்ள வேண்டுகோள் கடிதம் யார் எழுதினார் என்பது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் EX.P6 ல் பக்கத்தில் உள்ள வேண்டுகோள் கடிதத்தில் எழுத்திற்கும், கையெழுத்திற்கும் வித்தியாசம் உள்ளதா என்றால் நான் நிபுணர் அல்ல, அது பற்றி எனக்கு தெரியாது.

9. வேண்டுகோள் கடிதம் 1ம் எதிரி கொடுக்கவில்லை என்றும், அவரது கையொப்பம் கிடையாது என்றால் சரியல்ல. வேண்டுகோள் கடிதத்தில் எந்த தேதி, மாதம், வருடம் போன்றவைகள் இல்லை என்றால் ஆமாம். என்னிடம் காட்டப்படும் EX.P6 ல் வாக்குமூலம் 1ம் எதிரியால் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் இல்லை என்றால் சரியல்ல. EX.P6 வேண்டுகோள் கடிதம் எல்லாம் என்னால் வட்டாச்சியர் அலுவலகத்திற்கு 1ம் எதிரியின் பெயரில் கொடுக்கப்பட்டு தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நான் பின்னிட்டு அதை பெற்று 1ம் எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

10. போலியாக தயார் செய்ததாக சொல்லப்படும் EX.P6 ல் கண்டுள்ள பத்திர எண். 2490/2005 ல் 1ம் எதிரியின் கையொப்பமோ, கைரேகையோ உள்ளதா என்றால் இல்லை. அதில் 1ம் எதிரியின் புகைப்படமோ, எனது தகப்பனாரின் புகைப்படமோ ஏதும் ஒட்டப்பட்டுள்ளதா என்றால் இல்லை. முதல் தாளில் பின் பகுதியில் பதிவாளர் பெயர், எழுதிக்கொடுப்பவர் பெயர், எழுதிபெறுபவர் பெயர், சாட்சிகளின் பெயர் உள்ளதா என்றால் இல்லை.

11. EX.P6 ல் கண்டுள்ள பத்திர எண். 2490/2005 ல் 1ம் எதிரிக்கு எந்தவிதமான சம்மந்தம் கிடையாது என்றாலும் அவரால் உற்பத்தி செய்யப்படவில்லை என்றாலும் வீட்டினை எப்படி அபகரித்தேனா அதே போன்று இந்த நிலத்தை அபகரிக்கவேண்டி என்னால் இந்த ஆவணம் போலியாக தயார் செய்யப்பட்டு போலி அரசு முத்திரைகள் வைக்கப்பட்டு எதிரியின் பெயரில் நான் தயார் செய்து வட்டாசியர் அலுவலகத்திற்கு தாக்கல் செய்து பின்னிட்டு 1ம் எதிரியை வழக்கில் சிக்கவைக்க வேண்டும் என்பதற்காக தகவல் உரிமை சட்டத்தின் கீழ் போலி ஆவணங்களை நானே பெற்று எதிரிகளுக்கு எதிராக பொய் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல .

12. எனது அப்பா எப்போது காலமானார் என்றால் 2013 ம் ஆண்டு. எனது அப்பா உயிரோடு இருந்த காலக்கட்டத்தில் 1ம் எதிரி போலியாக பட்டாவை பெயர் மாற்றம் செய்துவிட்டார் என்று புகார் ஏதும் கொடுத்திருந்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிரியின் மீது எனது தகப்பனார் பட்டா பெயர் மாற்றம் செய்தது செல்லாது என்று நீதிமன்றத்தில் வழக்கு ஏதும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது அப்பாவிடம் முழுஅனுமதி பெற்று 1ம் எதிரிக்கு பட்டாமாற்றம் செய்யப்பட்ட காரணத்தினால் தான் எனது தகப்பனார் 1ம் எதிரி மீது எவ்வித புகாரோ, வழக்கோ தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஒரு பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் வில்லங்க சான்றோ மற்றும் அதற்கான ஆவணங்களை சரிபார்த்து அதன் பின்னர் தான் பட்டா பெயர் மாற்றம் செய்வார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. நானும், 1ம் எதிரியும், எனது சகோதரிகளும் 13 ஏக்கர் நிலங்களை தாங்களாகே வாய்மொழியாக பாகப்பிரிவிகை செய்து கொண்டு தனித்து அவர் அவர் நிலங்களை அனுபவித்து வருவதன் அடிப்படையில் எனது பெயரில் வீடும், எனது சகோதரிகளுக்கு 5 ஏக்கல் நிலமும், எனது சகோதரருக்கு 3 ஏக்கர் 60 சென்ட் நிலம் கொடுக்கப்பட்டு என்னால் எவ்வித ஆட்சேபணை தெரிவிக்காததால் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிரி தான் 2490/2005 ஆவணத்தை தயார் செய்தார் என்றும், அவர் தான் வருவாய் அலுவலகம் சென்று அதை தாக்கல் செய்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

13. எனது சகோதரர் எந்தவிதமான போலியான ஆவணங்களை தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. அரசு முத்திரையை தவறாக எனது சகோதரர்

பயன்படுத்தவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் கூட்டு சதி செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் எனது சகோதரின் இடத்தை அபகரிப்பதற்காக பொய்யான ஆவணங்களை கொண்டு எனது சகோதருக்கு எதிராக அந்த ஆவணங்களை கொண்டு பொய் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை எதிரிகள் ஏமாற்றவில்லை, மோசடி செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் குற்றமற்றவர்கள் என்றால் சரியல்ல. அ.சா.2 மலையாண்டி என்பவர் எனது பெரியப்பா மகன் என்றால் சரிதான். மலையாண்டி மீது எனது சகோதரர் சொத்து குறித்து வழக்கு தாக்கல் செய்துள்ள விபரம் தெரியுமா என்றால் அது எனது தகப்பனார் தாக்கல் செய்திருந்தார்.

**3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**14.** மணப்பாறை காவல்நிலையம், திருச்சிராப்பள்ளி காவல்துறை கண்காணிப்பாளர் அலுவலகம், நிலஅபகரிப்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்த தனிநபர் புகார் மனு ஆகியவற்றில் 3ம் எதிரியின் மீது எந்தவித புகாரும் நான் அளிக்கவில்லை. போலீசார் வழக்கு பதிவு செய்த பின்பு விசாரணையில் 3ம் எதிரி மீது எந்தவிதமான குற்றச்சாட்டுகளும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும், 3ம் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. 1, 2 எதிரிகள் தூண்டுதலின் பெயரில் 3ம் எதிரி செயல்பட்டார். 1, 2 எதிரிகள் 3ம் எதிரிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் 3ம் எதிரி மீது பொய்யான குற்றச்சாட்டு வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

15. 3ம் எதிரி எங்களுக்கு சொந்தமான நிலத்தில் நுழையவிடாமல் தடுத்தாக நான் எனது விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். 3ம் எதிரி குற்றச்சாட்டுகளில் ஈடுபட்டார் என்று எப்போது தெரியும் என்றால் போலீசார் 3ம் எதிரியை அழைத்து சென்ற பின்பு 3ம் எதிரி குற்றச்செயலில் ஈடுபட்டார் என்ற விபரம் எனக்கு தெரியவந்தது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கும், 3ம் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றும், 3ம் எதிரி எந்தவித குற்றச்செயலில் ஈடுபடவில்லை என்றும், எனக்கும், 3ம் எதிரிக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக நான் பொய்யாக 3ம் எதிரிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 3ம் எதிரி குற்றமற்றவர் என்றால் சரியல்ல.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.09.2025 | |
| CC.No. 136/2023 | |
| சாட்சி : PW2 (Recall) | |
| பெயர் : திரு. மலையாண்டி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு. ஆண்டி | தொழில் : விவசாயம் |
| கிராமம் : முத்தப்படையான்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 50/2025 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர் ) | |

---

சாட்சி மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறது.

**1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** செம்மலைக்கும், வரைபடம் வரைந்த இடத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால் ஒரு கி.மீ துாரம் இருக்கும். 1ம் எதிரி எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான். வரைபடம் வரைந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் 2 கி.மீ துாரம் இருக்குமா என்றால் ஒரு கி.மீ துாரம் இருக்கும். வரைபடம் வரைந்த இடத்திற்கு பக்கத்தில் பழனிச்சாமி, பாலம்மா, கோபிநாத் என்பவருக்கு சொந்தமாக நிலம் உள்ளதா என்றால் சரிதான்.

2. நான் கோபிநாத் என்பவருக்கு விற்பனை செய்த இடத்தில் தான் 1ம் எதிரி வீடு கட்டி வாழ்ந்து வருகிறாரா என்றால் நான் கோபிநாத்திற்கு விற்பனை செய்துவிட்டேன். விற்பனை செய்தபின்பு அந்த இடத்திற்கு செல்லவில்லை. 1ம் எதிரி என் மீது சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. 1ம் எதிரியின் தகப்பனார்தான் தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிரி இடத்தை கோபிநாத்திற்கு மோசடியாக நான் பத்திரம் செய்துவிட்ட காரணத்தினால் 1ம் எதிரி என் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதில் அவருக்கு தீர்ப்பாணை கிடைக்கபெற்று அதை விரோதமாக கொண்டு அ.சா.1 டன் கூட்டு சேர்ந்து கொண்டு 1ம் எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வரைபடம், பார்வை மகசர் போன்றவற்றில் எழுதியுள்ள விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் எனது கையொப்பம் காவல்நிலையத்தில் வைத்து போடப்பட்டது என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி குறுக்கு விசாரணை**

1, 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.